<u>சாதாரணக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2023-ம் ஆண்டு ஸ்ரீசோபகிருது வருடம் மே மாதம் **30.05.2023–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெறும். அது சமயம் கீழ்காணும் பொருள் குறித்து முடிவு செய்ய குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் : 381 / 2023</u>**

ஆணையர் அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல் 2023–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 382 / 2023</u>**

நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல் 2023–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 383 / 2023</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலத்துறையின் மானிய கோரிக்கையின் போது அரசு பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் சிறப்பு திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்திற்கு ஒருங்கிணைப்பு மையம் மூலம் உணவு சமைக்கப்பட்டு உணவு பள்ளிக் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டிக்காக முற்பகல் 7.30 மணியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பள்ளிகளையும் சென்றடையும் விதத்தில் ஒருங்கிணைப்பு மையம் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய வாகன வசதிகளுடன் ஏற்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. அதற்காக வழங்கப்பட்டுள்ள Type Design படி கட்டிடம் கட்ட உடனடியாக திட்ட அறிக்கை தயார் செய்து விரைவில் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஒருங்கிணைந்த சமையலறை கட்டிடம் கட்ட நகராட்சிக்குட்பட்ட செம்மாண்டம்பாளையம் ரோடு பகுதியில் உள்ள சர்வே எண். 1803 / 13- ல் உள்ள சர்கார் புறம்போக்கு இடத்தில் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடம் கட்ட ரூ. 28.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டம் என்பதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 659 / 2023 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 384 / 2023</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குப் பகுதிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்களின் மூலமாக தினசரி 6.00 MLD குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த குடிநீரை சுத்திகரிப்பு செய்யும் பணிக்கு ஹைபோகுளோரைடு திரவம் தேவைப்படுகிறது. எனவே இதனை வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஹைபோகுளோரைடு திரவம் சப்ளை செய்ய அனுமதிக்காக.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஹைபோகுளோரைடு சப்ளை செய்ய நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 868 / 2023 / இ1)

**தீர்மானம் – பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 385 / 2023**

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள அம்ரூத் 2.0 திட்டத்தில் ரூ.36.44 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் குறித்து நகராட்சிகள் மண்டல இயக்குநர் அவர்களால் 06.04.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டத்தில், புதியதாக 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி ஒன்று அமைப்பதற்கு சிவநாதபுரம் மேல்நிலைத்தொட்டி வளாகத்திலுள்ள 1.50 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டியை இடித்து அப்புறப்படுத்தி இடத்தினை ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்க வேண்டும். எனவே இப்பணியை உடனடியாக மேற்கொள்ள மண்டல இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த மேல்நிலைத்தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மண்டலப்பொறியாளர் அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. மேற்படி மேல்நிலைத்தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணியினை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1316 / 2022 / இ1)

**தீர்மானம் – பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதியின் பேரில் பணியினை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 386 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் செம்மாண்டம்பாளையம் பகுதியில் SBM 2.0 - 2021-22 திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியானது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி புதிதாக அமைக்கப்பட்டு வரும் கழிப்பிடத்தை சுற்றிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளதால், 06.04.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நேரடி ஆய்வின்போது கழிப்பிடத்தை சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேற்கண்ட பணியானது திட்டப்பணிகளில் மிக முக்கியமான பணியாக இருப்பதாலும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுவதாலும் அவசர அவசியம் கருதி கம்பி வேலி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ.42,000 /- ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 916 / 2023 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 387 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21–ல் அகலரைப்பாளையம்புதூர் பகுதியில் SBM 2.0 - 2021-22 திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியானது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி புதிதாக அமைக்கப்பட்டு வரும் கழிப்பிடத்தை சுற்றிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளதால், 06.04.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நேரடி ஆய்வின்போது கழிப்பிடத்தை சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேற்கண்ட பணியானது திட்டப்பணிகளில் மிக முக்கியமான பணியாக இருப்பதாலும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுவதாலும் அவசர அவசியம் கருதி கம்பி வேலி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ.42,000 /- ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 915 / 2023 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 388 / 2023**

இந்நகராட்சிக்குட்பட்ட மூலனூர் ரோடு ஈஸ்வரன் கோவில் அருகே உள்ள பொதுகிணற்றில் நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி அருகில் உள்ள சின்டெக்ஸ் தொட்டியில் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மின்மோட்டார் பழுதாகியுள்ளதால் மோட்டார் பொருத்தப்பட்டு 16 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும் மோட்டாரின் உதிரி பாகங்கள் மோட்டார் நிறுவனத்தில் கிடைக்காததாலும் புதிய மின்மோட்டார் பொருத்த வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.75,000/- ஆகும். மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1052/ 2023 / இ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 389 / 2023**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 இந்திரா நகர் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து மின்மோட்டார் மூலம் கழிப்பிடத்திற்கு சின்டெக்ஸ் தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. அந்த மின்மோட்டாரின் EB மின் ஒயரிங் மற்றும் மீட்டர் மின்கம்பத்தில் உள்ளதால் பழுதடைந்துள்ளது. அதை அருகில் உள்ள மின் மோட்டார் அறைக்கு மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இப்பணியானது மிகவும் அவசியமானதாகும். பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.38,000/- ஆகும். மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1078/ 2023 / இ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 390 / 2023**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 புள்ளசெல்லிபாளையம் அங்கன்வாடி அருகே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து Air Compresser மூலம் தண்ணீர் சின்டெக்ஸ் தொட்டியில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆழ்குழாய் கிணற்றில் மரத்தின் வேர்கள் உள்புகுந்து அடைப்பு ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் விநியோகம் செய்ய முடியவில்லை. எனவே வேர்களை அகற்றி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பராமரிப்பு பணிகள் மிகவும் அவசியமானதாகும். பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.50,000/- ஆகும். மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1079/ 2023 / இ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 391 / 2023**

இந்நகராட்சிக்குட்பட்ட TC மெயின் ரோட்டில் கீழ்கண்ட இடங்களில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து Air Compresser மூலம் தண்ணீர் சின்டெக்ஸ் தொட்டியில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் சின்டெக்ஸ் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் இவற்றை மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,20,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | சின்டெக்ஸ் தொட்டி மாற்றி அமைக்க வேண்டிய பகுதிகள் |
|---|---|
| 1 | மூலனூர் ரோடு |
| 2 | சொரியங்கிணத்துப்பாளையம் பிரிவு |
| 3 | ரெட்டிவலசு தெற்கு |

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண். 1080/ 2023 / இ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 392 / 2023**

இந்நகராட்சியில் 2023–24–ம் ஆண்டு பொதுநிதியின்கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 21.04.2023 அன்று மின்னனு கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சி குடிநீர் திட்ட பணிக்கு ஹைபோகுளோரைடு திரவம் சப்ளை செய்தல் | 5,00,000 |

வரப்பெற்ற இரண்டு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஸ்ரீவிநாயகா எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 5.56 % குறைவாக |
| 2) | ஸ்ரீசெந்தூர் முருகன் செம் டெக், ஒப்பந்ததாரர் | 11.11 % குறைவாக |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள ஸ்ரீசெந்தூர் முருகன் செம் டெக், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் ஹைபோகுளோரைடு சப்ளை செய்ய வேலை உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 868 / 2023 / இ2)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 393 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடங்களில் சிறு மின்விசைப்பம்பு திட்டத்தில் பொதுக்குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது.

1. பச்சாக்கவுண்டன்வலசு
2. ரெட்டிவலசு
3. சக்தி நகர்
4. கரட்டுப்பாளையம்
5. ராஜீவ் நகர்

கீழ்கண்ட இடங்களில் தண்ணீர் தொட்டி பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இதற்கு புதியதாக 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி பொருத்தப்பட வேண்டும்.

1. அரியாண்டிவலசு
2. ரெட்டி வலசு

மேலும் தாராபுரம் ரோடு பகுதியில் சேதமடைந்த பொதுக்குழாய்கள், வீட்டு குடிநீர் இணைப்புகளை சரி செய்ய வேண்டியுள்ளது. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுவதாலும் மேற்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,70,000 /- ஆகும்.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 723 / 2023 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 394 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட உப்புப்பாளையம் மேல்நிலைத்தொட்டி வளாகம் மற்றும் தீத்தாம்பாளையம் கழிப்பிடம் அருகில் உள்ள இடங்களில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட

மேல்நிலைத்தொட்டிகள் அம்ரூத் 2.0 திட்டத்தில் மேற்கொள்ள பணி நடைபெற்று வருகிறது. இதில் இடையூராக குடிநீர் மெயின் மற்றும் விநியோக குழாய்கள் செல்கிறது. எனவே இந்த குழாய்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. எனவே இந்த பணி அவசரமான பணியாக இருப்பதால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்புதலுக்கும். இதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- ஆகும்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1072 / 2023 / இ1)

**தீர்மானம் – பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 395 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட செம்மாண்டம்பாளையம் ரோடு கணபதிபாளையம் சாலையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு எரிவாயு தகனமேடை இயங்கி வருகிறது. தற்சமயம் இதில் நமக்கு நாமே திட்டத்தில் Auto LPG பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்த எரிவாயு தகன மேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதில் Scrubber, Chimney, Blower ஆகியவை முழுவதுமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த பழுதுகளை சரிசெய்தால் தான் எரிவாயு தகன மேடை இயக்க இயலும். ஏற்கனவே மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரடி ஆய்வின் பொழுது மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறித்தியிருந்தார்கள். எனவே இந்த பணி அவசியமான பணியாக இருப்பதால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும். இதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.19,00,000/- ஆகும்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் அவர்கள் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 998 / 2023 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 396 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் STP உடன் கூடிய FSTP அமைக்கும் பணிக்கு தேர்வுசெய்யப்பட்ட ( S.F No.1493, S.F No.1354) இடத்தில் பணி மேற்கொள்ள இடத்தின் மண் உறுதி தன்மை ஆய்வு செய்து அறிக்கை வழங்க, Coimbatore Institute of Technology, Coimbatore நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பியதில், மேற்படி உறுதி தன்மையை ஆய்வு செய்து அறிக்கை வழங்க CIT / CIVIL / SOIL / QUOTE / 077/ 2022-2023 நாள்.31.03.2023 கடிதம் மூலம் ரூ.82600/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை Fernando Drillers பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி Fernando Drillers நிறுவனத்திற்கு வங்கி வரைவோலை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 111 / 2023 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 397 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள அம்மா உணவகத்தில் பழுதடைந்த பொருட்களை சரிசெய்து தருமாறு தீபம் மகளிர் குழு, வெள்ளகோவில் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பத்தில் ஸ்டீம் அண்டாவில் ஆவி அதிகமாக வருவது, ஸ்டீம் அண்டா பைப் லிக் ஆகி தண்ணீர் கிழே வருவது, கிரைண்டர் பெரியது மற்றும் சிறியது சரியாக இயக்க முடியாதது, சமையல் இடத்தில் லைட் எதுவும் எரியாதது, சுடுதண்ணீர் மிஷின் பழுதாகி உள்ளது, குடிநீர் குழாய் மற்றும் வெளியே கை கழுவும் இடத்தில் சரியாக தண்ணீர் வராதது மற்றும் குடிதண்ணீர் தொட்டி உடைந்து

உள்ளதால் தண்ணீர் சேமிக்க முடியாமல் உள்ள மேற்கண்ட பழுதுகளை சரிசெய்யவும், உதிரி பாகங்களை புதியதாக பொருத்த ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர்மன்ற தீர்மான எண். 332/2023 நாள்.06.02.2023 ல் அனுமதி பெறப்பட்டு 13.02.2023ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | பொன்மாலா இன்டஸ்ட்ரீஸ், நல்லாம்பாளையம், கோயம்புத்தூர். | ரூ. 82647/- |
| 2 | ஸ்ரீமுகாம்பிகா இன்டஸ்ட்ரீஸ், மணியகாரம்பாளையம் ரோடு, நல்லாம்பாளையம், கோயம்புத்தூர். | ரூ.77998/– |
| 3 | சபரிகிச்சன் சர்வீஸ் (பி) லிமிட், மணியகாரம்பாளையம் ரோடு, நல்லாம்பாளையம், கோயம்புத்தூர். | ரூ. 68800/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சபரிகிச்சன் சர்வீஸ் (பி) லிமிட், கோயம்புத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 68,800/–ஐ பொது நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியத்தை கருதி வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 172 / 2023 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 398 / 2023**

வெள்ளகோவில் நகராட்சியில் 2023-2024–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 05.05.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| Pipeline shifting work of water supply arrangements @ Theethampalayam & Uppupalayam OHT tank line in Vellakovil Municipality | 3,00,000 |

வரப்பெற்ற இரண்டு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2) | AB எலக்ட்ரிக்கல்ஸ், ஒப்பந்ததாரர், | 5.00 % மதிப்பீட்டை விட அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 1072 / 2023 / இ2)

**தீர்மானம் – பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 399 / 2023**

வெள்ளகோவில் நகராட்சியில் 2023-24-ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 26.04.2023–ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| Repair & Maintenance of main & Distribution pipeline work (Ward No.1 to 21) in Vellakovil Municipality. | 4,00,000 /- |

வரப்பெற்ற இரண்டு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டுள்ளது

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் | 0.00 % மதிப்பீட்டு விலை |
| 2 | A.B எலக்ட்ரிக்கல்ஸ் – ஒப்பந்ததாரர் | 2.25 % மதிப்பீட்டை விட அதிகமாக |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள **கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்தாரர்**, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1078 / 2022 / இ1)

**தீர்மானம் – முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 400 / 2023**

வெள்ளகோவில் நகராட்சியில் 2023-2024–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 05.05.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| Extention of pipe line & Water Supply arrangements work @ Rajiv Nagar (Velu typing center line), Ariyandivalasu, Karattupalayam, Reddivalasu, Pacha gounden valasu, Sakthi nagar in Vellakovil Municipality. | 1,70,000 |

வரப்பெற்ற இரண்டு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2) | AB எலக்ட்ரிக்கல்ஸ், ஒப்பந்ததாரர், | 5.23 % மதிப்பீட்டை விட அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 723 / 2023 / இ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 401 / 2023**

வெள்ளகோவில் நகராட்சியில் 2023-2024–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 05.05.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| Extention of Pipe Line & Water Supply arrangement Work @ TC Road in Vellakovil Municipality | 1,10,000 |

வரப்பெற்ற இரண்டு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், | 0.03 % மதிப்பீட்டை விட குறைவாக |
| 2) | AB எலக்ட்ரிக்கல்ஸ், ஒப்பந்ததாரர், | 8.74 % மதிப்பீட்டை விட அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 867 / 2023 / இ2)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 402 / 2023**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தினசரி சேகாரமாகும் மக்கும் கழிவுகள் மூலம் தயார் செய்யப்படும் கலவை உரத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 210, நாள்.21.06.2002–ன் படி விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி ஊக்கப்படுத்துவதன் மூலம் வரும் ஆண்டுகளில் கம்போஸ்டின் பயன் விவசாயிகளுக்கிடையே பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. எனவே இந்நகராட்சி Micro-Composting Centre ல் இருந்து தயார் செய்யப்படும், கலவை உரத்தினை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.531/2023/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 403 / 2023**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவு கீழ்கண்டவாறு வாகனங்களுக்கான வாகனவரி மற்றும் பசுமை வரி செலுத்த வேண்டி உள்ளதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட வாகனங்களுக்கு வாகனவரி மற்றும் பசுமை வரி துப்புரவு ஆய்வாளரால் செலுத்தப்பட்டது.

| S. NO | VEHICLE DETAILS | RECEIPT NO/ DATE | TAX DETAILS / PERIOD | TAX AMOUNT |
|---|---|---|---|---|
| 1 | TN42AX5322 | KGM RTO TN230331c6625357 31.03.2023 | MV TAX 01.01.2023 – 31.03.2023 | 3039 |
| 2 | TN42V3812 | KGM RTO TN230503c8728447/ 03/05/2023 | Green tax 18.06.2022-17.06.2023 | 505 |
| 3 | TN42V3812 | KGM RTO TN230503c9728822/ 03/05/2023 | MV TAX 01.04.2023-31.03.2024 | 5710 |
| 4 | TN33AZ7537 | KGM RTO TN23050519153244/ 05/05/2023 | MV TAX 01.04.2023-31.03.2024 | 3030 |
| 5 | TN33AZ7538 | KGM RTO TN23050599153731/ 05/05/2023 | MV TAX 01.04.2023-31.03.2024 | 3030 |
| 6 | TN42Y3074 | KGM RTO TN23050599154845/ 05/05/2023 | MV TAX 01.04.2023-31.03.2024 | 4545 |
| 7 | TN42V6546 | KGM RTO TN230505C590851/ 05/05/2023 | MV TAX 01.04.2023-31.03.2024 | 11310 |
| **மொத்தம்** | | | | **31169** |

மேற்படி பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி வாகனங்களுக்கான வரியினங்கள் ரூ.31,169/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.611/2023/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் : 404 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட திருச்சி – கோவை ரோடு பகுதியில் 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் வடிகால் அமைக்கும் பணி நடைபெறும் பொழுது குடிநீர் குழாய்

பழுதடைந்துள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் வடிகால் பணிகள் முடிவடைந்துள்ளதால் புதியதாக குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,10,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 867 / 2023 / இ2)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 405 / 2023</u>**

வெள்ளகோவில் நகராட்சி உரக்கிடங்கில் மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் பேல் செய்து அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனம், அரியலூருக்கு நகராட்சி வாகனங்கள் மூலம் குறைவான பிளாஸ்டிக் கழிவுகளே அனுப்பும் நிலையில் உள்ளது. எனவே உரக்கிடங்கில் (Non Salable Plastic) பேல்கள் அதிக அளவில் தேங்கியுள்ள காரணத்தாலும் தனியார் வாடகை வண்டி மூலம் (10 மற்றும் 12 சக்கர டாரஸ் வாகனம் மூலம்) பேல்கள் அனுப்ப உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான விலைப்புள்ளியாக (நடை ஒன்றுக்கு டீசல், டிரைவர் பேட்டா உட்பட) ரூ. 16,000/– நாட்ராயா லாரி புக்கிங் வாகன உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குறைவான விலைப்புள்ளி தெரிவித்த வாகன உரிமையாளரிடம் மாதம் இரண்டு நடைகளுக்கு ரூ.32,000/– வீதம் ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையான காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.3,84,000/– வண்டி வாடகை செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மறுசுழற்சிக்கு ஆகாத பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கா வண்ணம் மேற்படி குறைவான விலைப்புள்ளி தெரிவித்த நாட்ராயா லாரி புக்கிங் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1127/2023/எச்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 406 / 2023</u>**

இந்நகராட்சியில் கீழ்காணும் குத்தகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கையின்பேரில் இவ்வலுவலக காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு இருப்பு உள்ளது.

| வ. எண் | தேதி | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 26.02.2009 | பேருந்து நிலைய சைக்கிள் நிறுத்துமிடம் வைப்புத்தொகை | 14262 |
| 2 | 15.07.2010 | பேருந்து நிலைய உணவு விடுதி | 156000 |
| 3 | 03.08.2010 | செங்காளிபாளையம் ரோடு ஆழ்குழாய் கிணறு அமைத்தல் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | 2000 |
| | | **மொத்தம்** | **172262** |

எனவே மேற்படி இருப்புத்தொகை ரூ.172262 /- ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 978/2023/அ3)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 407 / 2023</u>**

இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்.**295/2023** நாள்.**06.02.2023**ன் படி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் நான்கு ஒப்பந்த ஓட்டுநர்களை சப்ளை செய்ய M/S.துரை அன் கோ நிறுவனத்திற்கான அனுமதிக்காலம் **31.03.2023** வரை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**21787/2021**/EA2 நாள்.**02.10.2021**ல் நகராட்சிகளில் அடிப்படை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்த கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டதன்படி இவ்வலுவலக கடித ந.க.எண்.**1334/2021/எச்1**–ல் கருத்துரு அனுப்பபட்டு தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**33552/2022**/EA2 – SWM-11 நாள்.**10.01.2023** ல் மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு **24.03.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த M/S. S.R. Enter prises, Trichy நிறுவனத்திற்கு **02.05.2023** முதல் பணிகளை செய்ய வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்ய காலதாமதம் ஆனதால் நகர்ப்பகுதிகளில் குப்பைகள் தேங்கா வண்ணம் பொதுமக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏப்ரல் **2023** மாதத்தில் ஏற்கனவே நான்கு ஒப்பந்த ஓட்டுநர்கள் சப்ளை செய்து வரும் M/S.துரை அன் கோ நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு பின்னேற்பும், ஏப்ரல் மாதத்திற்கான செலவினம் ரூ.**70,210/–** மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்ய காலதாமதம் ஆனதால் நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் பொதுமக்கள் நலன் கருதி சுகாதாரமாக வைக்க பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான நிரந்தர ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி, ஏற்கனவே வெளிக்கொணர்வு மூலம் நான்கு ஓட்டுநர்கள் சப்ளை செய்து வரும் M/s.துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் மூலம் ஏப்ரல்–**2023** மாதம்பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான பின்னேற்பும் அதற்கான செலவினம் ரூ.**70,210/–** மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 607/2018/ எச்1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 408 / 2023</u>**

இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்.**294/2023** நாள்.**06.02.2023**ன் படி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் தனியார் முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் **117** தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மைப்பணி மேற்கொள்ள M/S.துரை அன் கோ நிறுவனத்திற்கான அனுமதிக்காலம் **31.03.2023** வரை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**21787/2021**/EA2 நாள்.**02.10.2021**ல் நகராட்சிகளில் அடிப்படை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்த கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டதன்படி இவ்வலுவலக கடித ந.க.எண்.**1334/2021/எச்1**–ல் கருத்துரு அனுப்பபட்டு தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**33552/2022**/EA2 – SWM-11 நாள்.**10.01.2023** ல் மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு **24.03.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த M/S. S.R. Enter prises, Trichy நிறுவனத்திற்கு **01.05.2023** முதல் பணிகளை செய்ய வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி, நகர்ப்பகுதிகளில் குப்பைகள் தேங்கா வண்ணம் பொது மக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏப்ரல் **2023** மாதம் ஏற்கனவே பொதுசுகாதாரப்பிரிவில் தனியார் முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் **117** தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மைப்பணி மேற்கொண்டு வரும் M/S.துரை அன் கோ நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பும், ஏப்ரல் மாதத்திற்கான செலவினம் ரூ.**18,71,430/–** மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்ய காலதாமதம் ஆகும் பட்சத்தில் நகரில் குப்பைகள் தேங்கா வண்ணம் பொதுமக்கள் நலன் கருதி சுகாதாரமாக

வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் ஏற்கனவே பொதுசுகாதாரப்பிரிவில் தனியார் முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 117 தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மைப்பணி மேற்கொண்டு வரும் M/s.துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பும், அதற்கான செலவினம் ரூ.18,71,430/— மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 469/ 2020 / எச்1)**

**<u>தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 409 / 2023</u>**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 31.03.2023 வரை இந்நகர்மன்ற தீர்மானம் எண். 296/2023, நாள்.06.02.2023—ன்படி அனுமதி காலமானது முடிவடைகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர், மற்றும் மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்களுக்கு புள்ளி விவரங்கள் மற்றும் கடிதங்கள் அனைத்து பிரிவுகளிலும் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்படி பணியின் அவசியம் கருதி ஏற்கனவே மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை நாள் ஒன்றுக்கு ரூ.595/— விகிதத்தில் (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) பணிகளை செய்து வரும் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் மூலம் ஏப்ரல் 2023 மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், அதற்கான ரூ.45,815/— செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

இந்நகராட்சிக்கு நிரந்தர தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அலுவல் பணியின் அவசியம் கருதி 3 கணினி தட்டச்சர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்த M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் மூலம் ஏப்ரல் 2023 மாதம் பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பும், அதற்கான ரூ.45,815/— செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 631 / 2018 / எச்1)**

**<u>தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் : 410 / 2023</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்புப்பணியில் 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் என DBC கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.1588/J1/2015 — நாள். 16.10.2015 கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் கடித எண்.5453/2019/உ3 நாள்.11.08.2020 கடிதத்தின்படி கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு வீடுகளுக்கு ஏற்ப கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்து நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் 15933 வீடுகளுக்கு 56 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்பொழுது இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணி 21 வார்டுகளிலும் 48 நபர்கள் மூலம் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சிதலைவர், திருப்பூர் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரதுறை, திருப்பூர் அவர்களது ஆய்வுகூட்ட அறிவுரைகளின்படி டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க DBC பணியாளர்களை கொண்டு வீடு வீடாக சோதனை செய்து கொசுப்புழு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி DBC பணியாளர்களுக்கு ஏப்ரல் 2023 மாதம் வரை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க இந்நகர்மன்ற தீர்மானம் எண். 359/2023, 31.03.2023 ல் அனுமதிக்கப்பட்டது.

